செ.வெ.எண்: 769 நாள்: 23.11.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் நிவர் புயல் மழையினை எதிர்கொள்ள அனைத்து பகுதிகளிலும் பேரிடர் மேலாண்மை குழுக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் 24 மணி நேரமும் கண்காணித்து தயார் நிலையில் இருக்க மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் அறிவுறுத்தல்.**

தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் புதியதாக தோன்றியுள்ள நிவர் புயல் மழையினை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

மாவட்டத்தில் ஏற்கனவே பேரிடர் பாதிப்புகள் ஏற்படக்கூடிய பகுதிகளான 195 கிராமங்கள் கண்டறியப்பட்டு அப்பகுதியில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்க்கொள்ளப்பட்டு,பேரிடர் மேலாண்மை குழுக்களும்,அரசு அலுவலர்களும் தயார் நிலையில் இருந்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு 251 நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் மூலம் பல்வேறு பணிகள் முடிக்கவிடப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது குறிப்பாக நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக,தஞ்சாவூர்,ஒரத்தநாடு,பட்டுக்கோட்டை.பேராவூரணி,பூதலூர்,திருவிடைமருதூர்,கும்பகே ாணம், திருவையாறு,பாபநாசம் போன்ற பகுதிகளில் உள்ள 349பாலங்கள்,5258 சிறுபாலங்கள் ஆகியவற்றில் சேதம் ஏற்படாமல் தடுத்திட 9560 மணல் மூட்டைகள்,4170 சவுக்கு குச்சிகள்,76 தடுப்பு கட்டைகள்,43 மரம் அறுக்கும் இயந்திரம்,23 லாரிகள்,21 டிராக்டர்கள்,23 ஜே.சி.பி,15 புல்டோசர்கள்(Bull Dozer),8 பம்பு செட்(Pumb Set),7 ஜெனரேட்டர்(Generator) ஆகியவகைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது

புயல் மற்றும் மழை நேரங்களில் பொதுமக்கள் தாழ்வான பகுதிகளில் தங்காமல் மேடு பகுதியில் தங்கி இருக்கவும் முன்னெச்சரிக்கையாக கால்நடைகள்,வாகனங்கள் ஆகியவற்றை பாதுகாப்பாக இடத்தில் தங்க வைத்திடவும் பேரிடர் தொடர்பான பாதிப்புகள் மற்றும் புகார்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுப்பாட்டு அறை கட்டணமில்லா தொலைபேசி 1077 மற்றும் 9345336838 என்ற கட்செவி எண் (Watsapp) மூலம் தகவல்களை தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.